நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**<u>சி.சி.எண்.148/2019</u>**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.6 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **குமார்** | **வயது** | : | **41** |
| **த/பெ.** | : **கோவிந்தராஜ்** | **தொழில்** | : | **டீ வியாபாரம்** |
| **ஊர்** | : **ஜோலார்பேட்டை** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **திருப்பத்தூர்** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் ஜோலார்பேட்டையில் வசிக்கிறேன். ஜோலார்பேட்டை ரயில் நிலைய கேண்டீனில் டீ வியாபாரம் செய்கிறேன்.கடந்த 05.12.2018ம்தேதி மாலை 05.00 மணிக்கு ஜோலார்பேட்டை ரயில்நிலைய கேண்டீனில் டீ விற்கு கொண்டிந்தேன். மேலும் நான் ஜோலார்பேட்டை இருப்பு பாதை காவல் நிலையம் வந்துக்கொண்டிருந்த போது, போலீசார் என்னை அழைத்தார்கள். நகையை எடுத்த நபரை பிடித்துள்ளதாகவும், அவரை விசாாரிப்பதற்கு சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 1ம் எதிரி அலமேலுவை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.அதன் பிறகு என்னையும், ஆஞ்சி என்பவரையும் சித்தூர் அரகொண்ட என்ற இடத்திற்கு அழைத்துச்சென்றார்கள். 1ம் எதிரி போலீசாரிடம் அந்த இடத்திலிருந்த நகை எடுத்து ஆஜர் செய்தார். போலீசார் அதனை கைப்பற்றிக்கொண்டார்கள். போலீசார் விசாரணையின் போது, 1ம் எதிரி ரயிலில் நகைகள் மற்றும் கைப்பைகளை திருடியதாகவும், திருடிய நகைகளை உருக்கி வைத்துள்ளதாகவும் கூறினார். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.4 ஆகும். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதாலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 5 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

நானும், ஆஞ்சியும் சேர்ந்து தான் ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். போலீசார்

கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். அது எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது. வெளியில் எங்கும் போலீசார் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான்.அன்றைய தேதியிலும், தற்போது சாட்சி சொல்ல வந்திருப்பதும் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் என்றால் சரிதான்.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**<u>சி.சி.எண்.148/2019</u>**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.7 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : | **ஆஞ்சி** | **வயது** | : 40 |
| **த/பெ.** | : | **துரைசாமி** | **தொழில்** | : **டீ வியாபாரம்** |
| **ஊர்** | : | **ஏலகிரி கிராமம்** | **சமயம்** | : |
| **வட்டம்** | : | **திருப்பத்தூர்** | **சாதி** | : |
| **மாவட்டம்** | : | **திருப்பத்தூர்** | | |

**முதல் விசாரணை:-**

நான் ஏலகிரி கிராமத்தில் வசிக்கிறேன். ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் டீ வியாபாரம் செய்கிறேன்.கடந்த 05.12.2018ம்தேதி மாலை 05.00 மணிக்கு ஜோலார்பேட்டை ரயில்வே போலீசார் என்னை காரில் வேலூருக்கு அழைத்துச்சென்றார்கள்.ஏதோ நகையை எடுக்க வேண்டுமென்று அழைத்துச்சென்றார்கள். மற்றபடி வேறு எதுவும் நினைவில்லை. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் நகையை கண்டுபிடித்ததற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் யாரிடமிருந்து நகையை கண்டுபிடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கெனவே அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜர் ஏற்கெனவே அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

போலீசார் கடந்த 05.12.2017ம்தேதியன்று ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்தில் என்னை முதலில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் 1ம் எதிரியை விசாரிப்பதற்கு சாட்சியாக தான் என்னை அழைத்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை.அன்றைய தினமே போலீசார் என்னையும், சாட்சி குமாரையும் 1ம்

எதிரியையும் ஜீப்பில் ஆந்திர மாநிலம் சித்தூர் அரகொண்டா கிராமத்திற்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் அழைத்துச்சென்றார்கள். என்னுடன் குமார் இருந்தார். 1ம் எதிரி எங்களுடன் இருந்தாரா என்பது நினைவில்லை. அரகொண்டா கிராமத்தில் தான் தங்க நகைகளை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான்.1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த நகைகளை தான் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான்.போலீசார் கைப்பற்றியதற்கு சாட்சியாக தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

எ.த.கு.வி:-

என்னை அழைத்து சென்ற ஜீப் அல்லது கார் என்றால் காரில் அழைத்துச்சென்றார்கள். எநத இடத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் சித்தூர் குண்டா அழைத்துச்சென்றார்கள். என்ன கலர் கார் என்றால் ஞாபகமில்லை. காரிலும், ஜீப்பிலும் என்னை அழைத்துசெல்லவில்லை என்பதால் தான் எனக்கு சரியாக சொல்லவில்லை என்றால் சரிதான்.ரயில்வே நிலையத்தில் நான் டீ விற்பதால் தான் போலீசார் கையெழுத்து போடும் படி சொன்னார்கள் என்றால் சரிதான். எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் இரண்டு கையெழுத்துக்கள் போட்டேன்.என்னுடன் குமாரும் சேர்ந்து காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டார் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பர் எழுதபட்டியிருந்தா, அல்லது தட்டச்சு செய்யப்பட்டியிருந்ததா என்றால் எழுதப்பட்ட தாளில் தான் கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்து போட்டதும், சாட்சி சொல்வதும் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் என்றால் சரிதான்.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.148/2019**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.8 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **: சந்தோஷ்குமார்** | **வயது** | **:** | **26** |
| **த/பெ.** | **: பரசுராமன்** | **தொழில்** | **:** | **தனியார் நிறுவனம்** |
| **ஊர்** | **: பால்நாங்குப்பம்** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **: திருப்பத்தூர்** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **: திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பால்நாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். தற்போது தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். இதற்கு முன்பாக ஜோலார்பேட்டை ரயில் நிலைய உணவு வியாபாரம் செய்து வந்தேன்.சுமார் 4,5 ஆண்டுகளுக்கு முன்பு காலை நேரம் திருவனந்தபுரம் ரயில் அறிவிப்பு வந்ததால் நானும் பழனி என்பவரும் விற்பனைக்கு சென்றோம்.அப்போது 3வது நடைமேடையில் போலீசார் வந்து என்னை அழைத்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். ஒருவயதான பெண்மணி இருந்தார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். 2ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. அந்த பெண்மணியை போலீசார் விசாரணை செய்தார்கள். நாங்கள் பக்கவாட்டில் இருந்தோம். போலீஸ் விசாரணையில் அந்த பெண்மணி ரயிலில் பயணிகளிடம் நகைகள், பர்ஸ், செல்போன் ஆகியவற்றை திருடிகொண்டு செல்வோம் என்று கூறினார். போலீசார் என்னிடம் உங்கள் முன்னிலையில் தான் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள். பார்த்து கொள்ளுங்கள் நாளை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றால் வரவேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு போலீசார் என்னிடம் முகவரி வாங்கிக்கொண்டு கையொப்பம் வாங்கினார்கள். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 6 ஆகும். சுமார் 4,5 நாட்கள் கழித்து மதிய நேரத்தில் போலீசார் மீண்டும் என்னை அழைத்தார்கள். வேலூர் வரை செல்லவேண்டும் என்று சொன்னார்கள்.போலீஸ் ஜீப்பில் என்னையும் பழனி என்பவரையும் அந்த பெண்மணியையும் போலீசார் வேலூருக்கு அழைத்துச்சென்றார்கள். வேலூரிலிருந்து ஒரு சின்ன சந்து வழியாக

உள்ளே அழைத்து சென்றார்கள். ஒரு கூரை வீடு மாதிரி இருந்தது. அந்த பெண்மணி அந்த வீட்டினுள் மண்ணை பறித்து அதில் ஒளித்துவைத்திருந்த உருக்கிய தங்கக்கட்டிகளை எடுத்து ஆஜர் செய்தார். போலீசார் அதனை கைப்பற்றிக்கொண்டார்கள். போலீசார் நகைகளை கைப்பற்றியதற்காக என்னிடம் சாட்சியாக கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை அதன் பிறகு விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்தால் வரவேண்டும் என்று சொன்னார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.8ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.148/2019**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.9 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **பழனி** | **வயது** | : | **40** |
| **த/பெ.** | : **முனுசாமி** | **தொழில்** | : | **உணவு வியாபாரம்** |
| **ஊர்** | : **தாமலேரிமுத்தூர்** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **திருப்பத்தூர்** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் தாமலேரிமுத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஜோலார்பேட்டை ரயில் நிலைய உணவு வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 5,6 ஆண்டுகளுக்கு முன்பு, காலை 06.00 மணியளவில் நான் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன் போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். அங்கே ஒரு பெண்மணியை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். சுமார் 5,6 ஆண்டுகள் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு அவரை அடையாளம் காட்ட இயலாது. அந்த பெண்மணி போலீஸ் விசாரணையின் போது, நகை, பர்ஸ் ஆகியவற்றை எடுத்து உள்ளதாக சொன்னார். அதன் பிறகு போலீசார் ஜீப்பில் வேலூருக்கு அழைத்துச்சென்றார்கள். எங்களுடன் அந்த பெண்மணி, சாட்சி சந்தோஷ், போலீசார் வந்தார்கள். அங்கே குடிசை வீடு ஒன்று இருந்தது. அந்த பெண்மணி குடிசையில் புதைத்து வைத்திருந்த தங்க கட்டிகளை எடுத்து ஆஜர் செய்தார். போலீசார் அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 6 ஆக ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.9 ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.